MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVAVIABI

| 11-03-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் மாசி 27 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|
| புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 10 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |


## விசுவாசம் கண்கவரும் காட்சியல்ல, கிறிஸ்துவைப் போல் சிந்திப்பதாகும்

மதமும், விசுவாசமும் கண் கவரும் காட்சியல்ல மாறாக, இவை இறைவார்த்தையும், தூய ஆவியாரும் நம் இதயங்களில் செயல்படுவதை உணர்வதாகும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் இத்திங்கள் காலையில் மறை யுரையாற்றினார்.



தொழுநோயாளியான, சிரியா நாட்டு மன்னரின் படைத்தலைவர் நாமான் குண மடைந்தது பற்றிச் சொல்லும் முதல் வாசகம், இறை வாக்கினர் எவரும் தன் சொந்த நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார் என இயேசு கூறியது பற்றிச் சொல்லும் நற்செய்தி வாசகம், இவையிரண்டையும் அடிப்படையாக வைத்து, மறையுரையில் விளக்கினார், திருத்தந்தை பிரான்சிஸ். இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கேற்ப, நம் சிந்தனை களையும், சிந்திக்கப்படும் முறையையும் மாற்றுவது பற்றியும், கிறிஸ்துவோடு ஒத்திசைவது போல், நம் பணிகள் மற்றும் உணர்வுகளை மாற்றுவது குறித்தும், இத்தவக் காலத்தில் திருஅவை, நம்மைச் சிந்திக்க வைக்கின்றது என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இறைவாக்கினர் எலிசா, தன்னைத் தொழுநோயிலிருந்து குணப்படுத்துவதற்கு கண்கவரும் நிகழ்வு ஒன்றை ஆற்றுவார் என, நாமான் எதிர்பார்த்தார். ஆனால் கடவுளின் குணப்படுத்தும் பாணி வேறு விதமாக இருந்தது என்றுரைத்த திருத்தந்தை, இயேசு நாசரேத் தொழுகைக் கூடத்திற்குச் சென்றபோதும், அவர் மீது வியப்பு முதல் அவரைக் கொலை செய்யும் ஆவல் வரை, மக்கள் அவரைப் பற்றி முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந் தனர் என்று கூறினார். ஒருவர், விசுவாச அறிக்கை முழுவதையும், அல்லது திருஅவையின் கோட்பாடுகளைச் சொல்லலாம், ஆனால் அவற்றை கிறிஸ்தவ உணர்வோடு சொல்ல வில்லையெனில் பயனில்லை என்றுரைத்த திருத்தந்தை, சிந்தனையைத் தெளிந்து தேர்ந்து கொள்ளும் அருளுக்காகவும், மனமாற்றத்திற்காகவும் இறையருளை மன்றாடுவோம் என்று கூறினார். மதம் கண்கவரும் காட்சி அல்ல, விசுவாசம் கண்கவரும் காட்சி அல்ல, மாறாக, இது இறை வார்த்தையும், தூய ஆவியாரும் நம் இதயங்களில் செயல்படுவதை உணர்வதாகும் என்று மறையுரையில் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் சிந்திக்கும் முறை மாறுவதற்கு இறைவனிடம் அருள் வேண்டுவோம் என்று கூறினார். ●

## இறைவனின் இல்லத்தை வர்த்தகத்தலமாக மாற்றும் மனநிலை

இறைவனின் இல்லத்தை வர்த்தகத் தலமாக மாற்றும் மனநிலையை திருஅவை பெறுவது மிகவும் மோசமானது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறு வழங்கிய மூவேளை செப உரையில் கூறினார்.

எருசலேம் கோவிலிலிருந்து வர்த்தகர்களை கிறிஸ்து விரட்டியடித்த நற்செய்தி நிகழ்வை மையப்படுத்தி, மார்ச் 4, இஞ்ஞாயிறன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகளுக்கு நண்பகல் மூவேளை செப உரையை வழங்கினார் திருத்தந்தை.

எப்போதெல்லாம் நமது நலனை மையப்படுத்துகிறோமோ அப்போதெல்லாம் நம் உள்ளங்கள் வர்த்தகத் தலமாக மாறிவிடுகிறது என்பதை தன் உரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நமது முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தி, நாம் மேற்கொள்ளும் நற்செயல்கள் ஆபத்தானது என்று எச்சரிக்கை விடுத்தார்.

“உமது இல்லத்தின் மீது எனக்குண்டான ஆர்வம் என்னை எரித்துவிட்டது” (திருப்பாடல் 69:9) என்ற திருப்பாடல் வரியின் பொருளை இயேசுவின் செயலில் சீடர்கள் உணர்ந்தனர் என்பதை எடுத்துரைத்தத் திருத்தந்தை, இயேசு கொண்டிருந்த இந்த ஆர்வம் அவரை சிலுவையில் கொண்டு நிறுத்தியது என்று கூறினார். இறைவனையே ஒரு விலை பொருளாகப் பயன்படுத்தி, இறை சாயலில் படைக்கப்பட்ட மனிதர்களையும் அவ்வாறே பயன்படுத்தும் தவறிலிருந்து நம்மை விழித்தெழச் செய்வதற்கு, இயேசு கடினமான வழிகளைப் பின்பற்றினார் என்று தன் மூவேளை செப உரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை.

## மரியா, திருஅவையின் அன்னை-திருவிழா

தூய ஆவியார் பெருவிழாவுக்கு அடுத்து வருகின்ற திங்கள்கிழமை, “புனித கன்னி மரியா, திருஅவையின் அன்னை” என்ற விழா சிறப்பிக்கப்படும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளார். பெந்தக்கோஸ்து நாளின்போது தூய ஆவியாருக்காகக் காத்திருந்ததிலிருந்து வருகின்ற, அன்னை மரியின் ஆன்மீகத் தாய்மை, இந்த உலகில் பயணம் மேற்கொள்ளும் திருஅவையை, தாய்க்குரிய அன்போடு எப்போதும் காத்து வருகின்றது என்பதற்கு முக்கியத்துவம் அளித்து, இந்த விழா உருவாக்கப்பட்டுள்ளது. திருத்தந்தையின் இந்த விதிமுறை பற்றி அறிக்கை வெளியிட்டுள்ள, திருப்பீட திருவழிபாட்டுப் பேராயம், அன்னை மரியா, லூர்து நகரில் முதன் முதல் காட்சியளித்த நிகழ்வின் 160ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, பிப்ரவரி 11ம் தேதியன்று, திருத்தந்தையின் இந்த விதிமுறை கையெழுத்திடப்பட்டது என்று கூறியுள்ளது.

**தூய ஆவியார் பெருவிழாவுக்கு அடுத்து வருகின்ற திங்கள் கிழமை புனித கன்னி மரியா, திருஅவையின் அன்னை என்ற விழா இலத்தீன் வழிபாட்டுமுறை திருவழிபாட்டில் கட்டாயமாகச் சிறப்பிக்கப்பட வேண்டும் என்ற திருத்தந்தையின் விதிமுறையை திருவழிபாட்டுப் பேராயம் வெளியிட்டுள்ளது.** இந்த பக்தி முயற்சி, திருஅவையின் தாய்மை உணர்வை வளர்க்க உதவும் என்றும் கூறப்பட்டுள்ளது. அருளாளர் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் மரியா, திருஅவையின் அன்னை என அறிவித்தார். ●

ஆசிரியர் பேனா...

# "இரக்கம் மற்றும் சாட்சிய பணிக்கு பன்மையில் ஒருமித்து இருப்போம்: 'இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்'" (மத்.28:20)

*(இந்திய ஆயர் பேரவையின் 33 ஆவது பொது அமர்வு; அறிக்கை;- பெங்களூரு - 2-9 பிப்ரவரி, 2018. - தமிழில் ஆசிரியர்)*

**முன்னுரை:** நமது இந்த பொது அமர்வுக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட தலைப்பு, மூவொரு கடவுளின் மறையுண்மை யைப் பற்றி சிந்திக்க நம்மை அழைக்கிறது. தந்தை, மகன், தூய ஆவியார் ஆகிய மூன்று ஆட்களாய் ஒரே கடவுளாய் இருக்கும் மாபெரும் மறையுண்மை நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளமாய் விளங்குகிறது. தனது வாழ்விலும் பணியிலும், மூவொரு கடவுளின் ஒருமைப் பாட்டை எதிரொளிக்க (reflect) அழைக்கப்பட்ட மூன்று திருஅவைகளும் இணைந்திருக்கின்ற இந்திய கத்தோலிக்கத் திருஅவையின் தனித்துவத்திற்காக நாம் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம்.

இத் தொலையறிவில் வேரூன்றி, இந்தியத் திருஅவை யின் ஆயர்களாகிய நாம் 184 பேரும், இந்திய ஆயர் பேரவையின் (CBCI) 33 ஆவது பொது அமர்விற்காக, இங்கு இந்த பெங்களூர்-தூய யோவான் தேசிய நலவாழ்வியல் சிறப்புநிலை கல்வி நிலையத்தில் (St.John's National Academy of Health Sciences) குழுமியிருக்கின்றோம். 2018, பிப்ரவரி -02, முதல் 09 வரையிலான நாள்களில், "இரக்கம் மற்றும் சாட்சிய பணிக்கு பன்மையில் ஒருமித்து இருப்போம்: 'இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" (மத்.28:20) - எனும் தலைப்பில் நாம் இறைவேண்டல் புரியவும், சிந்திக்கவும், நமது சொந்த அடையாளப் புரிதலை ஆழப்படுத்தவும், நம் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நமது பங்களிப்பை செம்மைப்படுத்தவும் இங்கு குழுமியுள்ளோம். கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் "இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன் (மத்.28:20)" என்ற நம் ஆண்டவரின் வார்த்தைகளால் நம்பிக்கையூட்டப் பட்டிருக்கிறோம், வலிமையூட்டப்பட்டிருக்கிறோம். 2017, நவம்பர் 17 முதல் 19 வரையிலான இந்திய கத்தோலிக்க செயலாட்சிக்குழுவின் [Catholic Council of India - (CCI) ] அறிக்கையை நாம் கருத்தில் கொண்டுள்ளோம்.

**இயேசுவின் மறைப்பணி:** முழு மனித இனத்தையும் கடவுளின் ஒரே குடும்பமாக ஒருங்கிணைக்கவும், ஒப்புர வாக்கவும் வந்த இயேசுவே நற்செய்தியாக விளங்குகிறார். அவர் அனைவரையும் அன்பு செய்ததன் மூலம் எல்லா மக்களுக்கும் கடவுளை பிரசன்னப்படுத்தினார், அதாவது பசியுள்ளோரை உண்பித்தலில், கலக்கமுற்றோரை திடப் படுத்துதலில், விளிம்பு நிலையினரின் மாண்பை வார்த் தெடுத்தலில், நோயுற்றோரை நலம் பெறச் செய்தலில், நம்பிக்கை யற்றோருக்கு நம்பிக்கையூட்டலில், அடிமைப் பட்டோருக்கு விடுதலை வழங்கலில், பாவிகளுக்கு மன்னிப்பு வழங்கலில், ஏழையருக்கு நீதி வழங்கலில், இறந்தோரை உயிர்ப்பித் தலில் - கடவுளை பிரசன்னப்படுத்தினார்.

**இந்தியாவில் திருஅவை:** இந்தியத் திருஅவை இயேசு வின் திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமா வழியாக நம்பிக்கை எனும் கொடையைப் பெற்றது. மறைப்பணி நாடுகளின் திருத்தூதராகப் போற்றப்பெறும் புனித பிரான்சிஸ் சவேரியார் போன்ற மாபெரும் புனிதர்களின் உழைப்பினால் நமது கிறிஸ்தவ நம்பிக்கை ஊட்டமளிக்கப்பட்டது, உறுதிப் படுத்தப்பட்டது. கிறிஸ்தவம் எத்துணைப் பழைமையானதோ, அத்துணைப் பழைமையானது இந்தியாவில் கிறிஸ்தவ நம்பிக்கை என்பதை அழுத்தமாக வலியுறுத்த நாம் விரும்புகிறோம். இந்தியாவின் இன்றைய இருப்பிற்கு, இந்திய திருஅவையின் பங்களிப்பும் அதில் மிகுதியாக இருக்கிறது. இந்திய திருஅவையின் அருட்பணிகளின் சாட்சியத்தில், தனது தலைவர் இயேசுவின் எடுத்துக்காட்டினைப் பின்பற்றி விளிம்பு நிலையோரையும், சாமானியர்களையும் தேடிச் சென்று தொண்டாற்றுவது நமது இந்திய தேசத்தின் தேவை என்பது தெளிவாகிறது. உன்னை அன்பு செய்வது போல உனக்கு அடுத்திருப்போரையும் அன்பு செய் (மத்.22:39) என இயேசு கற்பித்தது போல, திருஅவை அனைத்து மக்களும் நம் சகோதரர்கள் சகோதரிகள் என்று நம்புகிறது. ஏழையரை மேம்படுத்துவதும், மனித மாண்பினை வளர்த்தெடுப்பதும் நம் நாட்டின் அடிப்படைச் சட்டம் (Constitution) தரும் மதிப்பீடுகள் ஆகும்; மேலும் திருஅவை அவற்றை தனது மறைப்பணியில் பேணி வளர்த்து வந்திருக்கிறது. திருஅவை தனது அனைத்து செயல்பாடுகளிலும் ஒரே இலக்கைக் கொண்டுள்ளது, அதாவது அமைதிக்கான நான்கு தூண்களாக கருதப்படும் உண்மை, நீதி, அன்பு மற்றும் அமைதி (காண்: Pacem in Terris, புனித திருத்தந்தை 23-ஆம் ஜான்) ஆகிய தூண்களின் மேல் நமது தேசத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

**அதிகாரப்பூர்வமான தேசியத்தையும் மதச்சார்பற்ற அடிப்படைச் சட்டத்தையும் புரிதல்:** ஒரே ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தை (அ) மதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் தேசியம் ஆபத்தானது. அது ஒரு வித சீரான நிலைக்கு இட்டுச் செல்லும் என்றாலும், அது ஒருபோதும் உண்மையான ஒருமைப்பாட்டை வளர்க்காது. தவறான புரிதல்களில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் நமது தேசத்தை சுயஅழிவுப் பாதைக்குத்தான் இட்டுச் செல்லும். அமைதி, வளர்ச்சி, முன்னேற்றத்திற்கான நமது தேடலுக்கு, குறிப்பாக வளமான பல கலாச்சாரம், மொழி, மண்டலம், இனம் மற்றும் மதம் கொண்ட நமது நாட்டில், ஒற்றைக் கலாச்சாரம் ஒருபோதும் தீர்வு ஆகாது, ஆகவும் இயலாது. வன்முறை, விரைவாகவோ (அ) தாமதமாகவோ, வன்முறையாளர் மேல் தான் திரும்பும், "ஏனெனில் வாள் எடுப்பவன் வாளால் மடிவான்" (மத்.26:52). பெண்களுக்கு எதிரான கொடுமைகள், கொலைகள், சாதிச் சண்டைகள், சமூக வன்முறைகள், கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தின்மேல் தொடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். எனவே நமது நாட்டை உண்மையான அமைதி, ஒருமைப்பாடு, முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் உண்மையான தேசியத்தைப் பின்பற்றுவோம். உண்மையான தேசியம் ஒருவரது பொருளா தார நிலை, கலாச்சாரம், மண்டலம் (அ) மொழியைக் கருதாமல், ஒவ்வொரு குடிமகனின் மாண்பையும் மதிக்கிறது. நமது அடிப்படைச்சட்டம் தரும் சட்ட உரிமைகளை நல்மனம் கொண்ட அனைவரும் தாங்கிப் பிடிக்க வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்க விழைகின்றோம். வன்முறை மிகுந்த சூழலில், அனைத்து மக்களும் அமைதியை வளர்த்தெடுக்கும் பொருட்டு கும்பல் கலாச் சாரத்தையும், காவலர்கள் மனப் போக்கையும் ஒதுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். நமது நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், அனைவரின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற் காகவும் அரசு முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நமது பாராட்டை தெரிவிக்கிறோம், ஒத்துழைப்பு வழங்கு கிறோம். "இவ்வுலகம் ஒவ்வொருவரின் தேவைக்கும் போது மானதைக் கொண்டிருக்கிறது, ஆனால் ஒவ்வொருவரின் பேராசைக்குப் போதுமானதாக இல்லை, என நம் தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்.

**மனித வாழ்வு எனும் மிகவிலையுயர்ந்த கொடை:** கடவுளின் மிகவிலையுயர்ந்த கொடையாகிய மனித வாழ்வை கிறிஸ்தவ சமூகம் தாங்கிப் பிடிக்கிறது. எனவே, மனித உயிரின்மேல் தொடுக்கப்படும் தாக்குதல் ஒருபோதும் கடவுளால் உணர்த்தப்பட்டதும் இல்லை, பலவித நம்பிக்கை மற்றும் நடைமுறைகளால் நியாயப்படுத்தப்பட்டதும் இல்லை. நமது அன்பு தாய் திருநாட்டின் ஒவ்வொரு மனிதரின் உயிரும் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

வாரச் சிந்தனை

தவக்காலம் 5-ஆம் ஞாயிறு (18-03-2018) எரே.31:31-34 எபி.5:7-9 யோவா.12:20-33.

# "இழப்பு பெறுவதற்கே"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



அமெரிக்கா நாட்டின் மிஸிஸிப்பி ஆறு! அந்த ஆற்றில் ஒரு பெரிய பாலம். கப்பல் சென்றால் அது திறக்கும்! தரையில் ஓடும் வாகனங்கள் சென்றால் அது மூடிக்கொள்ளும். திறந்து மூடும் அதிசய பாலம் அது. அந்த பாலத்தை இயக்குவரின் மகன் தன்னுடைய அப்பா எப்படி பணியாற்றுகிறார் என்பதை அறிந்து கொள்ள அந்த பாலத்தை நோக்கிச் சென்றான்! அந்த பாலத்தைப் பார்த்த அந்த சிறுவனின் கண்கள் அகல விரிந்தன. அந்த பாலத்தின் அமைப்பு அவனுக்குக் கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அந்த பாலத்தை இரண்டாக பிரிக்கும் மாபெரும் இயந்திரம் அது. அந்த இயந்திரம் இருக்கும் பகுதிக்குச் சென்றான் மகன். அந்த இயந்திரத்தின் பல் சக்கரத்தில் ஏறிப் பார்க்க அவனுக்கு ஆசை! பல் சக்கரத்தின் மீது அந்தச் சிறுவன் நின்று கொண்டிருந்தான். தொலைபேசி ஒலித்தது! அந்த சிறுவனின் தந்தை பெற்ற செய்தி:

"இரயில் வருகிறது - பாலத்தைத் தாழ்த்தவும்". அந்த தந்தை இயந்திரம் இருக்கும் இடத்திற்குச் சென்றார். மிக உயரமான இடத்தில் பல் சக்கத்தின் மீது அவரது மகன் நின்று கொண்டிருந்தான். என்ன செய்வது? பேசுவதற்கு நேரமில்லை! மகனை இழப்பதா? இரயிலில் பயணம் செய்யும் நூற்றுக்கணக்கான மக்களை இழப்பதா? பல்சக்கர இயந்திரத்தை இயக்கினார். இரயில் பாலத்தை கடந்தது! மகன் இயந்திரத்தில் பலியாகி இறந்தான். இரயிலில் பயணம் செய்த நூற்றுக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்ற தன்னுடைய மகனை இழந்தார். என்னே அந்த தந்தையின் தியாகம்!

**இழப்பு பெறுவதற்கே:** மரம் பூவை இழக்கிறது. அது காயாகி, கனியாகி, சுவையாகி பயன் தருகிறது. பாறை தன்னை இழக்கிறது. செதுக்கப்பட்ட பின் அழகிய சிற்பமாகிறது. இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் உள்ளங்கள் இணைந்து ஒருவரையொருவர் இழக்கும் போதுதான் அந்த இல்லறம் நல்லறமாகிறது. இயேசு போதித்தார், சாதித்தார். அவர் இழப்பை இழப்பாக ஒருபோதும் கருதவில்லை. அவரின் இழப்பு மாட்சிமிக்க சிலுவையாக உயர்த்தப்பட்டது. மனித குலத்தை மீட்பதற்காகச் சிலுவை சாவை ஏற்க முன் வந்த இயேசு மண்ணக மாந்தர் அனைவரும் வாழ்வு பெற துன்பங்கள் வழியாக கீழ்ப்படிதலைக் கற்று, தமக்கு கீழ்ப்படிவோர் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணமானார் (எபி.5:8-9).

இன்றைய முதல் வாசகம் புதிய இதயத்தில் பொறிக்கப் பட்ட புதிய சட்டத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றது. புதிய இதயத்தை நாம் பெற வேண்டுமானால் நமது பழைய இதயத்தை இழக்க வேண்டும். இயேசு இறைமகனாக இருந்தும் துன்பத்திற்கு அடிபணிந்து இறைவிருப்பத்தை நிறைவேற்றுகிறார் என்பதை இரண்டாம் வாசகம் தெளிவு படுத்துகிறது.

**மரணத்தின் வழியே மாட்சிமை:** இயேசு பாவம் தவிர ஏனைய அனைத்திலும் நம்மை போன்று வாழ்ந்தார். மரணம் தனக்கு வேதனையளித்தாலும் கடவுள் தந்தை தனக்களித்த திருப்பணியைச் செய்து முடிக்க வேண்டும் என மன உறுதியுடன் இருந்தார். சிலுவையில் தொங்கினால்தான் அனைவரையும் ஈர்க்க முடியும் என்று சிலுவையை நாடுகின்றார். எனவேதான் "மாட்சிமை படுத்தினேன்; மீண்டும் மாட்சிமைப் படுத்துவேன்" என்ற வெற்றிக் கீதம் வானிலிருந்து ஒலித்தது. நமதாண்டவரின் வாழ்வின் முக்கியமான கட்டங்களில் தந்தை கடவுளின் குரல் ஒலிப்பதைக் கேட்கிறோம். திருமுழுக்கு நேரம், உருமாறி தோன்றிய நேரங்களில் தந்தையே தன் மகனுக்கு சான்று பகர்கின்றார் (மத்.3:17;17:5).

இயேசுவின் கல்வாரி பயணத் தொடக்கத்தில் அவருக்கும் தனக்கும் உள்ள உறவினை ஒலி வழியாக தந்தை உறுதி செய்து கொள்கிறார். அவரது பணியை செய்வதிலே இன்று நமக்கும் வேதனையும் சோதனையும் உண்டு. நம் போராட்டத்தில் கடவுள் நம்மோடு என்றும் இருக்கிறார் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அவரது குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம்தான் செவி கொடுத்து அவரது குரலை கேட்க வேண்டும்.

**கோதுமை மணி இழந்தால்தான்:** "கல்லை காயப் படுத்துவது சிற்பியின் நோக்கமும் அல்ல, நாம் சிலுவைகளை சுமப்பது கடவுளின் நோக்கமும் அல்ல". கோதுமை மணி முளைக்க வேண்டுமானால் மண்ணில் மடிந்து விதை என்ற சுயத்தை இழக்க வேண்டும். தமக்காக வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம்மை இழந்து நிலையான வாழ்வை உரிமையாக்கி கொள்பவர்கள் மண்ணில் மடிந்து, பல மடங்கு பயன் தரும் கோதுமை மணிகளுக்கு ஒப்பானவர்கள். கோதுமை மணி தன்னை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. மடிந்து இறுதியில் பலமடங்கு பயன் அளிக்கிறது. வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை என்று கூறுவார்கள். பலர் இவ்வுலகில் பிறந்தனர், இறந்தனர். எல்லோரும் திருச்சபையில் புனிதர் பட்டம் பெறவில்லை. எல்லோரும் சமுதாயத்தில் நல்ல பெயர் பெற்று சாலைகளில், தெருவீதிகளில் சிலைகள் நிலைநாட்டப்படும் அளவுக்கு தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளவில்லை. "தமக்கென மட்டும் வாழாமல் பிறருக்காக வாழ்கின்ற ஒரு சிலர் இன்னும் இருப்பதால்தான் இந்த உலகம் இன்றும் இயங்கி கொண்டிருக்கிறது என்பது உண்மை". நாம் ஒவ்வொருவரும் சுயநலம் இல்லாமல் பிறர் நல வாழ்வில் தொலை நோக்கு பார்வையில், இழப்பு வாழ்வு வாழ்ந்து, அந்த இழப்பால் மற்றவர்கள் பயன் பெற்றிருந்தால், ஆண்டவருக்கு நன்றி கூறுவோம். இல்லையெனில் இத்தவக்காலத்தில் மனம் மாறி கோதுமை மணி தன்னையே இழந்தாலொழிய அது பலன் தராது என்பதை உணர்ந்து இழப்பு வாழ்வுக்கு அடித்தளம் அமைப்போம். ஒன்றை இழந்தால்தான் நாம் மற்றொன்றை பெற முடியும் என்பதை இதயத்தின் ஆழத்தில் பதியம் போடுவோம். நிலைவாழ்வை பரிசாக பெற்றுக் கொள்வோம். ●

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2018-2019 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும்.

- ஆசிரியர்.



# இந்தியத் திருச்சபையில் (MEP) பாரீஸ் மறைப்பணி சபை 15

(தொடர்ச்சி) Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**கட்டடங்கள்:** அருள்பணி சவரிநாதர் 1911-இல் கூனங்குறிச்சி ஆலயத்தைக் கட்டத் தொடங்கினார். 1912-இல் Fr. Planat முகையூர், ஆற்காடு ஆலயங்களைக் கட்டினார். பில்ராம்பட்டு பழைய ஆலயத்தை இடித்துவிட்டு புதிய ஆலயத்தைக் கட்டினார்.



1913-இல் Fr. Gantier செஞ்சி, துரிஞ்சிப் பூண்டி, வளத்தி ஆலயங்களைக் கட்டினார். 1913-இல் பெரும் எண்ணிக்கையிலான ஆலயங்கள் எலத்தகிரி, முகையூர, திண்டிவனம், கூரைப்பேட்டை ஆகிய ஊர்களில் கட்டப்பட்டன. சிறிது காலத்துக்குப் பின் பத்தியாவரம் ஆலயத்தையும் சேத்துப்பட்டு புதிய பங்கு குரு இல்லத்தையும் கட்டினார். Fr. Gavan Duffy வேலந்தாங்கல் பங்கு குரு இல்லத்தைக் கட்டினார்.

1920-இல் புதுவை பேராலயம் புதுப்பிக்கப்பட்டது. அதே ஆண்டு Mr. Gaudart சம்மனசுக்களின் இராக்கினி மாதா ஆலயத்துக்கு (Notre Dame des Anges) மூன்று பளிங்கு பீடங்களைத் தானமான அளித்தார். அவர் கடலோரத்தில் உள்ள ஒரு துண்டு நிலத்தையும் கொடுத்தார். அது கோவிலுக்கும் கடற்கரைக்கும் இடையில் உள்ளது. அதற்கு ஜான்தார்க் அம்மா பூங்கா என்று பெயர் சூட்டிப் பங்குக்கு அதைக் கொடுத்தார்.

1932-இல் அருள்பணி இராஜேந்திரம் தச்சூர் ஆலயத்தைக் கட்டி முடித்தார். அதே ஆண்டு கடலூர் புது நகர் ஆலயத்தை Fr.Granjanny 1926-இல் கட்டினார். அதே ஆண்டில் செய்யூர் ஆலயம் ஒன்றையும் கட்டினார். அது தங்களின் மிஷனின் ஆபரணம் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்டது. அவ்வளவு அழகாக இருந்தது அந்த ஆலயம்.

Fr. Combes 1898-இல் திண்டிவனம் ஆலயத்துக்கு வரைபடம் வரைந்து கொடுத்தார். ஆனால் அதன் கட்டடப் பணியை Fr. Girard தொடங்கினார். 1911-இல் அருள்பணி சவரிநாதர் கூனங்குறிச்சி பங்கு குருவின் இல்லத்தைக் கட்டினார். அதே ஆண்டில் வளையான்குப்பம், இருப்புக்குறிச்சி, சோழநந்திபுரம் கோவில்களையும் கட்டினார். 1912-இல் Fr. Planat முகையூர், ஆற்காடு ஆலயங்களைக் கட்டினார். 1916-இல் Fr. Gavan Duffy வேலந்தாங்கல் பங்கு குருவின் இல்லத்தையும் வேலூரில் உள்ள தூய இருதய ஆண்டவர் ஆலயத்தையும் கட்டினார்.

1919-இல் அருண்பணி மரியபிரகாசம் அணிலாடி சிற்றாலயத்தைக் கட்டினார். 1916-இல் தொடங்கப்பட்ட தச்சூர் ஆலயத்தை 1922-இல் அருண்பணி இராஜேந்திரம் கட்டி முடித்தார்.

**மொரேல் பேராயர் பதவி விலகல்:** 1930-ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆயருக்கு 68 வயது மட்டுமே. ஆனாலும் தன்னுடைய பதவி விலகல் கடிதத்தை உரோமைக்கு அனுப்பினார். ஏன் இவ்வாறு செய்கிறார் என்று மற்றவர்கள் வியந்தனர். அவர்களிடம் தாழ்ச்சியுடன் புனித ஜான்மரி வியான்னியின் வார்த்தைகளில் சொன்னார்: “என் தகுதியற்ற வாழ்வைப்பற்றிப் புலம்ப” என்றாராம்.

ஆனால் உண்மையாகவே பேராயர் மொரேல் மிகச் சிறந்த அறிவாளி. அதே அளவு தாழ்ச்சியும் உள்ளவர். ஒரு முறை தன் நண்பர் ஒருவரிடம் சொன்னாராம்: ஒரு குறிப்பிட்ட பணியில் உள்ள நான் ஒரு முக்கிய முடிவு எடுக்க என்னிடம் போதிய பலம் இல்லை.”

அவருடைய பதவி விலகல் விண்ணப்பம் ஏற்கப்பட்டது. Fr. Augustin Colas சேலம் ஆயராக நியக்கப்பட இருந்தார். ஆனால் அவர் புதுவை பேராயராக நியமிக்கப்பட்டார். பேராயர் மொரேல் அவரை 1930 செப்டம்பர் 29-ஆம் தேதி பேராயராகத் திருநிலைப்படுத்தினார். இரண்டு வாரங்கள் கடந்து Fr. Prunier சேலம் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1909-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட காலத்தில் 29 மிஷனரி குருக்களும் 15 இந்திய குருக்களும் இறந்தனர். பேராயர் மொரேல் ஏற்காட்டில் ஓய்வு பெற்றார். அங்கு 10 ஆண்டுகள் தன்னால் முடிந்த பணிகளைச் செய்தார். பால்மாதீஸ் எஸ்டேட் காப்பித் தோட்டப் பொறுப்பாளியாகவும் இருந்தார். ஏற்காட்டில் இருந்த குளுனி சபை சகோதரி களுக்குத் திருப்பலி நிகழ்த்தி வந்தார். 1940-இல் நோயுற்று பெங்களூருக்குச் சென்றார். இங்கு புனித மார்த்தா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். 1948-இல் அங்கு இறைவனடி சேர்ந்தார்.

அவர் மிகவும் அன்பு செய்யப் பட்டார். அவருக்கு எப்படிப் பிரச்சினை களைச் சந்திப்பது என்று தெரியும். ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்யவும் தெரியும். ஒரு வார்த்தையில் கூற வேண்டுமென்றால் சிறந்த தலைமைப் பண்பு உள்ளவர். இவர்தான் மறைக் கல்வி ஆசிரியர் களுக்காக பள்ளிக்கூடப் பணிகளை நடத்த Fr. Gavan Duffy-க்கு முழு ஒத்துழைப்பு தந்தவர். ●

**“ஒயிட் ஹெல்மெட்ஸ்” (White helmets) அமைப்பினரின் உயிர்காக்கும் ஒப்பற்ற பணி:** சிரியாவில் வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் இடங்களில் வெள்ளை நிற தலைக்கவசம் அணிந்து வாகனத்தில் பல இடங்களுக்கும் விரைந்து சென்று இடிபாடுகளில் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்றி வருகிறார்கள். சிரிய - இரஷ்ய கூட்டுப் படைகளின் தாக்குதலால் ஒவ்வொரு நாளும் தரை மட்டமாகும் கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கித் தவிக்கும் சிரியா மக்களை மீட்டு மருத்துவமனைகளில் கொண்டு சேர்க்கும் பணிகளை வெள்ளை நிற கவசம் (White helmets) என்ற தன்னார்வ அமைப்பு செய்து வருகிறது. ஜேம்ஸ் லி மெசுரியர் (James le Mesurier) என்பவர் நிறுவிய இந்த அமைப்பில் 3000 க்கும் அதிகமானோர் (பெண்கள் உட்பட) பணியாற்றுகின்றனர். சிரியாவின் உள் நாட்டுப் போர் தொடங்கிய 2014-ஆம் ஆண்டு முதல் பணியாற்றும் இவ்வமைப்பில் பெரும்பாலோர் பொறியாளர்கள், ஓவியர்கள், வங்கி அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் உள்ளனர். இதுவரை போர் தளத்திலிருந்து 99,220 பேரை காப்பாற்றி யுள்ளனர். மீட்புப் பணிகளோடு, உயிர் காத்துக் கொள்ளும் தற்காப்பு முறைகள்பற்றி விழிப்புணர்வு தருகிறார்கள், போர்-அட்டூழியங்களை சமூக வளைத் தளங்களில் பதிவிடு கிறார்கள். ஆபத்து மிகுந்த இப்பணி புரிவோரில் இதுவரை 159 பேர் உயிரிழந்துள்ளனர்.

- தி இந்து / வத். வானொலி.

**குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்**

**நாள்: 17-03-2018 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம்.** (புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய வளாகம்) உப்பளம், பாண்டிச்சேரி-1.

**மையக் கருத்து:**

**“இயேசுவின் பாடுகள், உயிர்ப்பு மறைபொருட்களை கொண்டாட தயாரிப்பு”**

**நடத்துபவர்:** அருட்தந்தை A.**மரிய அந்தோணி** பங்குதந்தை (மேல்புதுப்பாக்கம் பங்கு - வேலூர் மறைமாவட்டம். முன்னாள் பேராசிரியர், தூய இருதய குருத்துவக் கல்லூரி, சென்னை.)

**அழைப்பவர்:** அருள்தந்தை **பிலோ**, இயக்குநர் மற்றும் மைய செப தயாரிப்புக் குழுவினர், புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்புநிலையம், உப்பளம், புதுவை-1.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363



# திருவுளத்தைத் தேடுவோம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

அனைவரின் அன்றாட வாழ்வை நாம் சந்திக்கும்போது காண்பது மிகவும் பாராட்டுக்குரியதாகவும் இருக்கின்றது, அதே சமயத்தில் சோதனைகள் மிகுந்ததாகவும் உள்ளது. இந்நிலையை எவ்வாறு புரிந்து கொள்வது, சரி செய்வது, முழுமையாக்குவது என்று நாம் முயல்வது முக்கியம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் ஆயிரத்திற்குமேலான முடிவுகளை எடுத்து செயல்படுத்துகின்றோம். இதை அவ்வப்போது ஆய்வுசெய்து, நம் ஒவ்வொருவருடைய வாழ்வையும் வளப்படுத்துவது மேலானது. இந்நிலையில் நமது அனுபவங்கள் யாது, நமது அறிவுத்திறன் எவ்வளவு சரியாக உள்ளது. நமது விருப்பத்தின் ஆற்றல் எவ்வளவு மிகுந்துள்ளது என்று கவனம் செலுத்துவோம். ஒருவர் தன்னை முழுமையாக உணர்ந்து புரிந்து கொண்டால். ஒருவரின் திருவுளம் தெளிவுபெறும், பயன் பெறும்.

**திருவுளத்தின் அடித்தளம்:** கடவுளும் நமது பெற்றோர் களும் நம்மைப் பெற்றெடுக்கின்றார்கள். நன்மையும் பலவீனமும் நம்மில் குடிகொண்டிருக்கின்றது. நன்மை யினால் பலவீனத்தை மேற்கொள்ள வாய்ப்பு உண்டு. பலவீனத்தைப் பயன்படுத்தி நன்மையை இழந்து வாழ்வு வீணாகவும் வாய்ப்பு உண்டு. படைப்பின் ஆதிகாரணமான கடவுள் தான் நமது வாழ்வை புனிதமாக்க இயலும். நாம் நம்பிக்கையோடு அவருடன் ஒத்துழைப்பது தேவைப் படுகிறது.

திருவுளத்தைக் கடவுள் ஒரு மனநிலையாக மட்டுமல்ல, அதைவிட மேலாக தனக்குள் தானாக இருக்கும் ஆவி யையே நம் ஒவ்வொருவருக்கும் அருளுகின்றார். ஆவியை நாம் ஒவ்வொருவரும் சுதந்திரத்தோடு ஏற்றுக்கொள்ள தனது ஆற்றலை நம்பிக்கையாக அருளுகின்றார். முழு சுதந்திரத் தோடு நாம் ஆவியை ஏற்றுக் கொள்வதின் செயல்பாடாக இருக்க, “உமது திருவுளம் எம்மில் நிறைவேறுக” என்று செபிக்கவும் கற்றுக் கொடுத்திருக்கின்றார். எவ்வித வற்புறுத்தலுமின்றி இவ்வாறு இறைவன் அருளும்போது நாம் எவ்வளவு அன்போடு ஏற்றுக்கொண்டு அன்னை மரியாளைப் போல அற்புதமாக வாழ இயலும். நம்மில் நம்பிக்கை வளர்ந்தால், எதிர்நோக்கு ஒளிரும் வாழ்வு அன்பாகும். நமது சான்று வாழ்வும் ஏனையோருக்கு உதவிடும்.

**அவரின் திருவுளம்:** தேடுங்கள் கண்டு அடைவீர்கள். வாழையடி வாழையாக ஆரோக்கியமான மரபு வழியாக அவருடையத் திருவுளம் நமக்குத் தெளிவாகிறது. கடவுளின் திருநூல்கள் என்று பல்வேறு சமய நூல்கள் வழியாக நமக்கு அருளப்படுகிறது. வாழ்வின் வழிகாட்டிகளான பெற்றோர்கள், பெரியோர்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றனர். நாம் அமைதியாக செபிக்கும்போது திருவுளம் நம்மில் தென் படுகின்றது. குழு செபத்தில் குழுவாகவும் திருவுளத்தை அறிந்துகொள்கிறோம். கலந்து உரையாடும் போது திருவுளத்தை கண்டு உணர்கிறோம். பொதுவான குறிப்பான ஒழுங்குமுறைகள் திருவுளத்தை நமக்குத் தெளிவுபடுத்து கின்றன. இவ்வாறு பல்வேறு முறையில் நமக்குக் கடவுளின் திருவுளம் அறிய வழிகள் உண்டும்.

இத்தகைய எளிதான, அற்புதமான, பல்வேறு வழிகள் இருந்தும் அவரின் திருவுளம் ஒவ்வொருவரிலும், குழுவிலும் எவ்வளவு பின்பற்றப்படுகிறது என்று சற்று யோசித்துப் பார்த்தால், நம்மையே நாம் கேள்விக்கும், வருத்தத்திற்கும், கோபத்திற்கும் ஆளாவோம். இனியாவது ஒரு அர்த்தமுள்ள வாழ்வை வாழ அவரது திருவுளத்தை நம்மில் முதன்மை யானதாக முக்கியமானதாக மாற்றக் கூடாதா என்று சபதம் எடுக்க தூண்டப்படுகிறோம். முடிந்தால் முடியாதது உண்டோ என்றும், கடவுள் பக்தியும் வளர்ந்தால் வாழ்வு விடியலை சுவைக்கும் என்பதில் இயமில்லை.

**ஆவிக்குப பணிவோம்:** எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டு ஆனால் ஆவிக்கு எதிரான பாவங்களுக்கு மன்னிப்பு இல்லை என்பதை மேலோட்டமாக அல்ல, வேரோட்டமாக நாம் உணர்ந்து, செபித்து, உரையாடல் செய்து பார்ப்பது மிகவும் தேவைப்படுகிறது. இதை உணர்பவர்கள் அதற்கு உடன்பட்டால் எவ்வளவோ மேலானது விடுதலை மிகுந்தது, மகிழ்வானது.

“ஆவிதான் நான், நான்தான் ஆவி” என்ற உண்மையை ஒருவர் ஏற்பது தேவை. அந்த ஆவியின் உடமைதான் உடல், உள்ளம். காணும் உடலையும் உள்ளத்தையும் முதன்மை யாக்கி, ஆவியைப் பொருட்படுத்தவில்லை என்றால் அதை தற்கொலை என்றே நாம் கூறலாம், அல்லது நடைபிணங் களாக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்றும் கூறலாம். மெய்மையும் விடுதலையும் தான் மனிதமாகும். இவைகளை ஆவியில், ஆவியால், ஆவிக்குப் பெறுவது பொருத்தமாகும். எனவேதான் மனித குலத்தின் மூன்று முக்கியமான சோதனை களான உணவு-உடல், உடமை-உள்ளம், சுயம்-சொர்க்கம், இவைகளை இயேசு இறை ஆவியால் மேற்கொண்டதுபோல, நாமும் அன்றாடம் மேற்கொள்ள விழிப்பாய் இருக்க அழைக்கப்படுகின்றோம். ஆவியால் வழிநடத்தப்படுகின்றவர் களே மனிதர்கள், கிறிஸ்தவர்களாவர்.

**திருவுளம் நிறைவேறுக:** உயிரைக் கொடுப்பவரைவிட உயிரைப் பெறுகின்ற நாம் விஞ்சியவர்கள் அல்ல. யுகங்கள் கடந்த பின்பும் ஒவ்வொரு தலைமுறையும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் வெற்றியை சுவைப் பதைவிட, ஒரு தொடர் போராட்டத்தைத்தான் நாம் சந்தித்து வருகிறோம். இயேசுவின் எடுத்துக்காட்டும் நம்மை முழுமையாக ஆட்கொள்ளவில்லை. மாதாவின் பாடமும் நம் மனதில் படியவில்லை. ஏனோ தானோ என்று வாழ்வதுதான் பெரும்பாலான நமது வாழ்வு அனுபவமாக உள்ளது. நமது ஆவியையும் இறை ஆவியையும் இணைப்பதில், தொடர்ந்து உணர்வதில் தான் நாம் வெற்றி வாழ்வை உயிர்த்த ஆண்டவரில் சுவைக்க முடியும். அவர் வளர்க, நான் தேய்க என்று கிறிஸ்துவின் முன்னோடி வாழ்ந்து காட்டியதை நாமும் வாழ வேண்டும். அவரின் உணர்வு நம்மில் நமது உணர்வை விட அதிகமானால் தான் அவரது திருவுளம் நிறைவேற வழி உண்டு வாய்ப்பு உண்டு.

“மாதா பிதா குரு தெய்வம்” என்ற பழமொழி எக்காலத்திற்கும் பொருந்தும். நவீன காலத்தில் முடியாது என்று எண்ணுகின்றவர்கள் அலகையின் சோதனைகட்கு ஆளாகின்றனர். பெற்றோர்கள், வழிகாட்டிகள், ஆசிரியர்கள் தங்கள் வாழ்வில் நேர்மறையாக அனுபவித்ததை, வாழ்விலிருந்து வழங்கினால், ஏனையோர் வாழ்வைத்தொட வாய்ப்புண்டு. கடைபிடிக்காத போதனைகள் விழலுக்கு இறைத்த நீர் போலாகும். இன்றைய உலகம் என்றும் போல் எடுத்துகாட்டுகளைத்தான்தேடுகிறது, போதனை எல்லாருக் கும் எளிதில் தெரிந்ததாகும். அதிகாரத்தை அல்லது அமைப்புகளைப் பயன்படுத்தி வாழ்வதைவிட, சான்று வாழ்வின் சக்தி மிகவும் மேலானது. சான்றுக்குமுன் பேச ஒன்றுமில்லை, கடைபிடிக்கத்தான் அழைக்கப்படுகின்றோம்” உமது சித்தம் எனது பாக்கியம்” என்பதே வாழ்வின் மந்திரமாகட்டும். ●



## இரக்கத்தைப் பெறுவோம்! இயற்கையைப் பேணிக் காப்போம்.

சென்ற இதழ் தொடர்ச்சி... *– வெட்டிவயல் வளவன் –*

வளர்ந்த நாடுகள் எரிசக்தியை சேமித்து சமாளிப்பதை போல் நாமும் செய்திட விழிப்புணர்வு கொள்வோம். புகைக்கும் வாகனங்களில் நாம் பயன்படுத்தும் எரிபொருள், திரவநிலை ஈயம் கலந்தவை. நாம் இன்று ஈயம் கலக்காத பெட்ரோலை பயன்பாட்டுக்கு கொண்டு வருவோம்.

இயற்கையைப் பாழ்படுத்த ஒரு தீக்குச்சி போதும். அதன் இலக்கு ஒளியேற்றும் தீப ஒளிக்கு! தீபம் வேறு "தீ" வேறு, நமக்குத் தெரியும். இன்று ஊர்கள் - நாடுகள், கடைகள், மனித உடல்கள் - உயிரிகள் பகைமைத் தீயில் கருகுகின்றன- உலக நாடுகளில் காட்டுத் "தீ"யை கட்டுப்படுத்த முடியவில்லை. எங்காவது ஒரு நாளில் "தீ"யால் சீரழிக்கப்படுகிறது. வனவிலங்குகள், மூலிகைகள் பல்வகை உயிரினங்கள், உயிர்கள், தாவரங்கள் காண முடியவில்லை. **எதிர்கால சந்ததி இவைகளை இனி படம் போட்டுத்தான் பார்க்கனும். மின் கசிவு, கவனச் சிதறல்கள், அரை வேக்காட்டுத் தொழிற்நுட்பம், கொள்ளை இலாபச் சுரண்டல், மலிவுள்ள கருவிகள் என "தீ" எரிவதற்கு காரணிகள் என ஆய்வுகள் கூறுகின்றன.** காட்டு விலங்குகள், யானைகள், மற்ற பிற ஊருக்குள் வருவதின் நோக்கம் புரியுமே! காகிதத்தை சாம்பல் ஆக்கும். அதே நேரம் இரும்பை வலிமையாக்கும். காற்று வரின் "தீ" பரவும் காற்றுமண்டலம் மழைக்கு காரணி என்றாலும் "தீ" பரவ போ(ர)ணி!

**"தீ"-உணர்த்தும் பாடம்:●** நமது உடலில் நீரும், சூடும் இணைந்தால் நலம். ஆண் பெண் இணைந்து நீரும் நெருப்பு போல் இருப்பின் வாழ்வு மலரும். நூல்கள் காட்டும் கருத்து. "வானத்து கதிரவன் மறைந்தால் மீண்டும் தோன்றும், விடியலில் நிலவும், விண்மீன்கள் மங்கினாலும் மீண்டும் ஒளிரும். ஆனால், இதயத்தில் நம்பிக்கைச் சுடர் அணைந்தால் எப்படி இருக்கும் சிந்திக்க தோழர்களே" என்கிறார் **உருது கவிஞர் ஆஸி. வளி (வாதம்) "தீ" (பித்தம்) நீர் (கபம்) என்பது தமிழர்களின் உணவு, மருந்துக் கோட்பாடு.** நிலம், நீர், காற்று நெருப்பால் ஆனது நம் உடலியல் தத்துவம். **தண்ணீர் தீயை அணைப்பது போல், ஒருவனுடைய சாந்தமுள்ள சொல் கோபத்தை, வக்கிரப் புத்"தீ"யை தீமையைத்** தணிக்கும். "மூட்டைப்பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்திய கதை" என்று அடிக்கடி நம்மவர் மத்தியில் சொல்லப்படும் சொலவடை பழமொழி. **அமெரிக்கா, கலிபோர்னியா, லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியைச்** சேர்ந்த ஒருவர் தன் வீட்டில் இருந்த மிகப் பெரிய சிலந்திப் பூச்சியை கொல்ல பெரிய "பர்னர்" மூலம் தீயிட்டு கொளுத்தினார். அடுக்கு மாடி குடிஇருப்பில் பரவிட தீயணைப்புதுறை வந்து, அணைத்த செய்தி (தினத்தந்தி 20.1.18) எப்படி? வீட்டில் தேன் கூடு, குளவிகள் கூடு இருப்பின், தீயிட்டு கொளுத்தி, தீபரவிய செய்திகள் ஏராளம். 1958 ல் என் ஊரில் (வெட்டிவயல்) 3 வீடுகள் தவிர கூரைவீடுகளே - அந்நாளில் 4 வயது சிறுவர்கள் தீக்குச்சியை வீட்டில் விளையாட்டாக பற்றிவிட ஊரே அழிந்தது. அதன் பின்னர், மண் சுவர் ஓட்டு வீடுகள் தற்போது கெட்டிக் கட்டிடங்கள். அந்த பையனை இன்று "தீக் கொளுத்தி" என்று கிண்டல் செய்வர்.

● ஒரு ஜென் துறவியின் குடிசை பற்றி எரிந்தது. நெருப்புச் சுடர் தன் தீ நாக்குகளை, சுழன்று சுழற்றி, தன் பசியைத் தணித்தது. சீடர்கள் அழுதனர், பலர் ஆறுதல் கூறினர்; எரிந்து முடிந்த தன் குடிசைமுன் கம்பீரமாய் மகிழ்ச்சியுடன் நின்றார், வானத்தைப் பார்த்து ஆகா.... என்று சிரித்தார். மக்கள் விரைத்து நின்றனர். **ஆஹா நிலவின் குளிர் நிலவை மறைத்து நின்றது இக்கூரை எரிந்துவிட்டது" என்றார். கவலைபட்டு நம் உயரம் ஒரு மில்லி மீ. கூட்ட முடியுமா? - அழுவாருடன் சேர்ந்து மகிழ்க. நற்செய்தி உரைகள் நமக்கு உரமாக அமையட்டும்.** கல்லில் நெருப்பின் சக்தி உண்டு. கற்களை உரசின், தீப்பொறி பற்றுவது அதனாலே. **அசாம்** மாநில மக்கள் அறுவடைத் திருவிழா ஜனவரியில் கொண்டாடுவர் "ஆற்றை ஒட்டியுள்ள வயலில் அறுவடை செய்தபின் வைக்கோலை தற்காலிக "கூரைவீடு" ஆக கட்டி தீயிட்டு உணவு சமைத்து கூடி உண்டு மகிழ்வர். நாள் இரவு ஆட்டம் பாட்டம் நடக்கும். வழிபாடும் செய்வர். இதை **"போகாலி பிஹூ"** என்று கூறுவர் (ருசியாவில் ஆர்த்தடாக்கிஸ் கிறித்தவர்கள் "எபிபானி" விழா நிகழ்வில் குளிர்ந்த நீரில் குளித்து தங்களை தூய்மை செய்வர். **ஊர்கள் தோறு பாஷைகள் வேறு என்பது இதுதான்.**

- தொடரும்...

## பொதுநிலையினர் பணிக்குழு: புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்; பொதுநிலையினர் பயிற்சி.

➢ திருச்சி, பிராட்டியூரில், தமிழக ஆயர் பேரவை சார்பில் இயங்கிவரும் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில், கடந்த பிப். 17,18 ஆகிய தினங்களில் பயிற்சி முகாம் இடம் பெற்றது. அதில், பல மறைமாவட்டங்களிலிருந்து, அருள்பணி உதவியாளர்கள் பங்கேற்றனர்; பயிற்சி முகாமை தூத்துக்குடி அருட்பணி முனைவர் ச.தே. செல்வராசு அவர்கள் வழிநடத்தினார். நமது மறை மாவட்டத்திலிருந்து திருவாளர்கள். M.திவ்யநாதன் (அழகப்பசமுத்திரம்), A. ஆரோக்கியதாஸ் (திண்டிவனம்), M. ஜான் பீட்டர் (விக்கிரவாண்டி), S. லூர்துசாமி (கூனங்குறிச்சி) ஆகியோர் பங்கேற்று பயனடைந்தனர்.

➢ அஞ்சல் வழி இறையியல் கல்வி-பயிற்சி: இதனை தமிழக பொதுநிலையினர் குழு வழிநடத்துகிறது. ● கடந்த ஆண்டு 98 நபர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு சான்றிதழ் பெற்றனர். வரும் 2018, ஜுன் ஒன்றில், அடுத்த பயிற்சி தொடங்கும். 22 பாடங்களைக் கொண்ட இப்பயிற்சிக்கான பாடநூல் ஒவ்வொரு மாதமும் பயிற்சி பெறுபவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மூன்று கருத்தரங்குகள் நடைபெறும். இதற்கான விண்ணப்பப் படிவம் நமது மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு செயலர் அருட்பணி D. ஆரோக்கியதாஸ் (அ) இணைச் செயலர் திரு. S. லூர்துசாமி அவர்களிடம் கிடைக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பயிற்சிக் கட்டணம் ரூ. 250/- உடன் மறைமாவட்ட பணிக்குழு செயலர் தந்தையிடம் மார்ச் இறுதிக்குள் சேர்ப்பிக்க வேண்டும்.

**செய்தி:** அருட்பணி **D. ஆரோக்கியதாஸ்**, செயலர் & பங்குதந்தை, தூய பாத்திமா அன்னை ஆலயம் ஜங்ஷன் ரோடு, விருத்தாச்சலம், கடலூர் மாவட்டம்-606001.
திரு. S. லூர்துசாமி, இணைச்செயலர், அலைபேசி: 9443876084

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு.R.ஆரோக்கியசாமி**

**தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் (ஓய்வு), புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, திண்டிவனம்.**

**பிறப்பு: 26-02-1926**
**இறப்பு: 13-03-2011**

13-3-2018 செவ்வாய் காலை 6.00 மணிக்கு, திண்டிவனம் புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு பாகூர், ஜெயராக்கினி அன்னை ஆலயத்திலும், மாலை 6.30 பிள்ளையார் குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு எங்களது தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கவும்.

**பிரிவால் துயருறும்**
மனைவி: **ரத்தினமேரி ஆரோக்கியசாமி**
மகன்: **Rev.Fr.A. பெர்க்மான்ஸ் பீட்டர்**
**மற்றும் பிள்ளைகள், உறவினர்கள்.**
திண்டிவனம்.

## விண்ணக வாழ்வின் 13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**15-03-2018**

**தோற்றம் :11-07-1917**



**மறைவு:15-03-2005**

**திரு. அதிசயநாத தாவீது**

"ஆண்டவருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தங்கள் கடமை முடித்து இளைப்பாறுகிறார்கள்"

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! இப்பூவுலகினின்று உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் அருமை அப்பாவின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா விண்ணகப் பேரின்பத்தையும் அளித்தருளும்.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.**
புதுவை.

**நமது பங்குகளில்:** 18-2-2018 ஞாயிறன்று பெரியாக்குறிச்சி - புனித சவேரியார் ஆலயத்தில் அரசு தேர்வு எழுதவிருக்கிற 10, 11 மற்றும் 12 ம் வகுப்பு மாணவர்களுக்காக சிறப்புத் திருப்பலியும், அதனை தொடர்ந்து புனித சவேரியார் இளைஞர் இயக்கத்தின் சார்பில் சிறப்பு கருத்தரங்கும் நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்பணி J.லாரன்ஸ் அவர்கள் தலைமை யேற்க பாடற்குழுவினர் பாடிய இறைவணக்கத்திற்குப்பின், சிறப்பு அழைப்பாளர்கள் பங்குத் தந்தை மற்றும் மாணவர் களால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. திரு. P. ஆனந்த் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் மனநல பயிற்சியினை திரு.சகாயராஜா அவர்கள் நடத்தினார். தேர்வு நடைபெறும் முறை மற்றும் தேர்வு எழுதும் முறை பற்றி NLC பள்ளி ஆசிரியர் திரு.மரியவியானி அவர்கள் சிறப்புரையாற்றினார். மாணவர்கள் தேர்வு சமயத்தில் மேற்கொள்ள வேண்டிய உடல், நல குறிப்புகளை மருத்துவர் திரு. அருண் வர்க்கிஸ் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார். மாணவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியின் நன்மைகள், பயன்கள் குறித்து பேசினர். (Feedback). அனைவருக்கும் குறிப்பேடு, மற்றும் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளர்கள் பொன்னாடை அணிவித்து கவரவிக்கப் பட்டார்கள். திரு. ஆனந்த்ராயன் அவர்கள் நன்றி கூற பங்குதந்தை ஆசிருடன் நிகழ்வு முடிவுற்றது. சுமார் 60 மாணவர்கள் சமய வேறுபாடின்றி கலந்துகொண்டு பயன் பெற்றனர். நிகழ்வுகளை திரு. X. ரிஷப் ரோசாரியோ மற்றும் செல்வி டெல்பின் தொகுத்து வழங்கினர். கருத்தரங்கு ஏற்பாடுகளை இளைஞர் இயக்கத்தின் தலைவர் தேவ மார்ட்டின் தலைமையில் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் செய்திருந்தனர்.

J.லாரன்ஸ், பங்குதந்தை, பெரியாக்குறிச்சி.



வெற்றிகரமான 10-ம் ஆண்டு
புண்ணியபூமி புனிதப் பயணம் (9இரவு/10பகல்)
ஜோர்டான், இஸ்ரேயல் & எகிப்து
❖ சென்னை விமான நிலையத்தில் இருந்து புண்ணியபூமிக்குச் சென்று மீண்டும் சென்னை விமான நிலையத்திற்கே திரும்பி வர. ❖ 3* & 4* Hotel Stay, Visa மற்றும் அனைத்து சேவைகளும் உட்பட. (தனிப்பட்ட சேவைகள் தவிர்த்து)
❖ தமிழ்நாடு, புதுவையில் இருந்து இதுவரை 2000க்கும் மேற்பட்ட திருப்திகரமான பயணிகளை அழைத்து சென்றுள்ளோம். ❖ குடும்ப உறுப்பினர்களை அழைத்து செல்வதை போன்ற பாதுகாப்பான அன்பான பயணம். ❖ கூடுதல் இடங்களை பார்க்க கூடிய வாய்ப்பு ❖ அன்பான தந்தைகளின் Daily Mass ❖ மற்றும் பல....
பயணக்கட்டணம்: Rs. 89,500*/- நபருக்கு
பயணக்காலம்: 22 -31 மே 2018
ஐரோப்பா புனித பயணம் (14 இரவு / 15 பகல்)
பயணக்கட்டணம்: Rs. 1,99,000*/- நபருக்கு
பயணக்காலம்: 16-30 ஜூன் 2018
முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு
SANGAMAM LEISURE MANAGEMENT PVT LTD.,
No.56, 1st Floor, Mission Street, Pondicherry - 605 001.
Ph: 0413-4202322/24, Cell : 95970 82240, 98941 02518
SANGAMAM LEISURE www.sangamamleisure.com, E-mail: sales@sangamamleisure.com
Fb: sangamamleisure


## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு.D.ஸ்தனிஸ்லாஸ்**

**தோற்றம்: 12-12-1919**

**மறைவு: 10-03-2013**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

அமைதியின் திருவுருவமே எம் தந்தையே
ஆன்மீகத்தில் எம் வழிகாட்டியே
இறை நம்பிக்கையில் எமை வளர்த்தவரே
ஈகை குணத்தில் எமை வாழவைத்தவரே
உழைப்பின் சிறப்பை எமக்கு உணர்த்தியவரே
ஊக்கத்தைக் கைவிடாமல் வாழ எமக்குக் கற்பித்தவரே
எளிமையாம் இறைவனின் வழி வாழ வழிகாட்டியவரே
ஏற்புடையவராக இறையன்பில் வாழ வழிகாட்டியவரே
ஐயமின்றி உறுதியுடன் வாழ வழிகாட்டியவரே
ஒற்றுமையின் பலத்தை எமக்கு உணர்த்தியவரே
ஓய்வின்றி எமக்காய் உழைத்தவரே! என் அன்புத் தந்தையே!

"இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள இயேசுவே என் இதயத்தை உமது இதயத்தோடு சேர்த்துக் கொள்ளும்" - என்று சொல்லி இறை நம்பிக்கையில் எங்களை வாழ வைத்த உம்மை நினைத்து கனத்த இதயத்துடன் கலங்குகிறோம்.

**ஜெபம்**

கருணையின் உருவமே எம் இறைவா! எம் தந்தையின் இதயத்தை உமது இதயத்தோடு சேர்த்து, உமது பேரின்ப ஒளியில் ஒளிர்ந்திட வேண்டுமென்று உம்மை வேண்டுகிறோம்.

**நினைவுத் திருப்பலி:**

9-3-2018 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்கா.

10-3-2018 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு,புனித விண்ணேற்பு அன்னை ஆலயம்.

**என்றும் உம் நினைவில் வாழும் குடும்பத்தினர்**

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்திலிருந்து, பெங்களூரு, புனித பேதுரு இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியும் அருள்மிகு தந்தை P. **ஜோசப் டைட்டஸ்** அவர்களின் தந்தையார் திருவாளர் R. **பெரியநாயகம்** ஆசிரியர் (வயது 91) அவர்கள் விழுப்புரம் நகரில் 27-2-2018 செவ்வாய் அன்று இறையடி சேர்ந்தார். 28-02-2018 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில், விழுப்புரம் புனித சவேரியார் பங்கு ஆலயத்தில் இடம்பெற்ற அன்னாரது அடக்கச் சடங்கு திருப்பலியை அருள்மிகு தந்தை P.ஜோசப் டைட்டஸ் அவர்கள் தலைமையேற்று நிகழ்த்தினார். இக்கூட்டுத் திருப்பலியில் 60 க்கும் அதிகமான அருட்தந்தையர்கள் இணைந்தனர், ஏராளமான அருட்சகோதரிகளும் இறைமக்களும் இக்கூட்டுத் திருப்பலியில் பங்கேற்று, இறையடி சேர்ந்த திரு. R. பெரியநாயகம் ஆசிரியர் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர். திருப்பலிக்குப்பின், அன்னாரது திருவுடல் விழுப்புரம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தந்தையை இழந்து துயருறும் அருள்மிகு தந்தை P. ஜோசப் டைட்டஸ் அவர்களுக்கும், அவரது அன்னைக்கும்,உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் செபம் கலந்த ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறையடி சேர்ந்த திரு. R. பெரியநாயகம் ஆசிரியர் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைய செபிக்கின்றோம். **- ஆசிரியர்.**

**தாம் வாக்களித்ததைக் கடவுள் செய்ய வல்லவர் என்பதை அவர் உறுதியாய் அறிந்திருந்தார். (உரோ.4:21)**



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**18ஆம் படலம்**

கொடிய கொள்ளை நோயாக வந்த ஐந்தாம் வாதையால், எகிப்தியரின் கால்நடைகள் இறந்தன. ஆனால், இசுரயேலரின் கால்நடைகளோ நன்றாக இருந்தன! இதன் மூலம் யாவே கடவுளின் கைவன்மை வெளிப்பட்டது; இஸ்ரயேலரை விடுவிக்கும் விண்ணகத் தந்தையின் திருவுளத்திட்டம் செயல்பட்டது!

62 **(தொ.நூ.12:1-3) ஆண்டவர் ஆபிராமை நோக்கி "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு நான் ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்... உன் வழியாக மண்ணுலகில் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார்.**

முதுபெரும் தந்தை ஆபிர காமை
        முகமலர்ந் திறைவன் அழைத்தது முதலாய்,
எதுஎது மெய்யிறை வழிபா டென்பதை
        இசுரேல் இனத்தவர்க்(கு) இயம்பினார் யாவே;
கதுமெனப் பற்றி யாவே கடவுளைக்
        கணம்கணம் அறிந்து ஏற்றவர் வாழ்ந்திட,
புதுமைகள் நிகழ்த்தி அவைவழி உணர்த்தியும்
        புன்மன மாந்தரோ நழுவியே சென்றனர்!

(ஆபிரகாமை-இவருடைய முந்திய பெயர் ஆபிராம் என்பதாகும். இப்பெயரைத் தான் ஆண்டவர் ஆபிரகாம் என்று மாற்றி அமைத்தார்; கதுமெனப் பற்றியே - விரைவாக இறுகப் பிடித்தே; புன்மனத்தாரோ - குறைபாடுடை மனத்து மக்களோ)

63 **இசுரயேல் மக்கள், யாவே கடவுள் மீது கொண்ட நம்பிக்கையில் ஓரளவு தளர்ச்சி ஏற்பட்டதற்கு, அவர்கள், எகிப்தியர் வழிபட்ட கடவுளர்மீதும் தெய்வங்கள் மீதும் கொண்டிருந்த தவறான நம்பிக்கையும் காரணமாக இருந்தது. யாவே கடவுள், இசுரயேலரைப் பார்வோன் ஏற்படுத்திய அடிமை வாழ்விலிருந்து முழுமையாக விடுவித்தும் அதன் முழுமையை அவர்கள் உணர்ந்து ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டினார்கள் போலும்!**

நழுவியே போதற்(கு) எதுபெருங் காரணம்?
        நன்குநாம் அறிவோம் மனத்தடு மாற்றமே;
தொழுதனர் மீண்டும் எகிப்தின் கடவுளை!
        தூரமாய் வந்துமே அவரது மனத்தில்
முழுமையாய் மாற்றம் ஏற்படா நிலையே
        முற்றிப் பழுத்து இருந்தது என்பதை
உழுதவர் உளத்தைப் பார்த்திடில் புரியும்;
        உளந்தடு மாறினர் விடுதலை பெற்றுமே!

(உழுதவர் உளத்தைப் பார்த்திடில் - இசுரயேலரின் மனப்பாங்கை ஆழமாக நாம் அவர்களின் செயல்பாடுகளை ஆய்ந்து பார்த்திடில்)

64 **இசுரயேல் இன மூதுவர்கள் வழிவழியாய், மெய்யான படைப்புக் கடவுள் யாவே மட்டுமே என்பதை உணர்த்தினர். எனினும் எகிப்தில் வாழ்ந்த இசுரேலர் சிலரும் பலரும் எகிப்தியர்களின் தெய்வ வழிபாட்டு நம்பிக்கையிலும் ஓரளவிற்கு நப்பாசை கொண்டவர்களாயும் இருந்தார்கள் என்பது, சீனாய் மலை அடிவாரத்தில் தாங்கள் வழிபட பொன்கன்று ஒன்றுச் செய்துதர ஆரோனை வற்புறுத்திப் பெற்ற நிகழ்வே தெரிவிக்கின்றது. இப்போக்கை வெறுத்தார் யாவே. தம்மை அறியாது, தம் வாக்குக்குச் செவி சாய்க்காத வஞ்சக மனம் கொண்ட பார்வோனையும் அவன் மக்களையும் தண்டிப்பதற்காகவுந்தான் கொள்ளை நோயால் எகிப்தியரின் கால் நடைகளைக் கொன்றார்.**

இந்த அளவிற்கு எகிப்து நாட்டிலே
        இருந்த இசுரயேல் மக்கள், பொய்மைப்
பந்தப் பிடிக்குள் அகப்பட் டுழன்றனர்;
        பழமையின் போக்கிலும் மனம்செல விட்டனர்;
அந்தப் போக்கையும் அறிந்த யாவே,
        அவர்கள் தொழுத காளைகள், கால்நடை
வந்த கொள்ளை நோயால் மடியவே
        வைத்தார் எகிப்தியர் வளர்த்தவை யாவுமே!

(பொய்மைப் பந்தப் பிடிக்குள் - உண்மை இல்லாத பொய்மைப் போக்குக் கட்டுக்குள்; எகிப்தியர் வளர்த்தவை யாவுமே - எகிப்திய மக்கள் வளர்த்த வீட்டு விலங்குகளையும், தங்கள் வாழ்விற்கு மூலாதாரமான கால்நடைகள் யாவற்றையும்)



# திருச்சிலுவை மீட்பின் அடையாளம்

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.

**சி**ல வருடங்களுக்கு முன், ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக பம்பாய் நகரம் சென்றேன். இந்த கருத்தரங்கு முக்கியமாக ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டது. அப்போது ஆசிரியர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். அவைகளில் ஒன்று என் மனதை தொட்டதுமல்லாமல் இன்னமும் என் மனதில் நிலை கொண்டு இருக்கிறது.

ஒரு பள்ளியிலே ஒரு எல்.கே.ஜி. மாணவன் படித்துக் கொண்டிருந்தான். வயது நான்கு இருக்கும். அவன் அந்த வகுப்பிலே சிறந்த மாணவனாக இருந்தான். படிப்பிலும் சரி, ஒழுக்கத்திலும் சரி, ஆசிரியர்களுக்கு பயந்து கீழ்படிந்து வந்தான். அந்த மாணவனுடைய வீட்டுச் சூழல் எப்படி இருக்கும் என்று பார்த்தால் அவனைப் போல் பிடிவாதம் உள்ளப் பையன், குறும்புக்காரப் பையன், தம்பி, தங்கைகளுடன் சண்டைப் போடும் பையன், அப்பா, அம்மா சொல் கேட்காதப் பையன் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இப்பேர்பட்டப் பையன் பள்ளியில் எப்படி நல்ல பேர் வாங்குகிறான் என்பது புதிராக இருந்தது.

சாதாரணமாக பள்ளிகளில் பெற்றோர் சந்திப்பு என்று ஒரு நாள் இருக்கும். அன்றைய தினம் பிள்ளைகளும், பெற்றோரும், அவர் அவருடைய ஆசிரியர்களை சந்தித்து நிறைவு, குறைவு பார்ப்பார்கள். குறிப்பிட்ட இந்த மாணவனுடைய தாய், ஆசிரியரை சந்தித்து, இவனுடைய படிப்பு விவரம், பள்ளியில் நடந்து கொள்ளும் விதம், ஆசிரியர்களிடம் உள்ள அணுகுமுறை, மற்ற மாணவர்களோடு பழகும் விதம், முதலியவைகளை கேட்டறிந்தார். ஆசிரியர் இவனைப் பற்றி ஒரு மைனஸ் பாயின்ட் கூட சொல்லவில்லை. இது தாய்க்கு அதிர்ச்சியை உண்டாக்கியது. இவன் பள்ளியில் நடந்துகொள்ளும் விதமும், வீட்டில் நடந்து கொள்ளும் விதமும், எதிர்விரோதமாக இருந்தது.இது தாய்க்கும், ஆசிரியர்க்கும் புரியாத புதிராக இருந்தது. பின்பு ஒரு உண்மை நிகழ்ச்சிக்கு பிறகுதான், இவர்களுடைய ஐயம் தீர்க்கப்பட்டது.

இந்தப் பள்ளியில் சாதாரணமாக மாணவர்களை சேர்க்கும் போது, அறிவுரை கூறுவார்கள். சேர்க்கப்பட்ட மாணவர்கள் அத்தனை பேரும் ஒன்று கூட்டி, ஒரு பெரிய ஹாலில் அமர வைத்து, அறிவுரை கூறி, இந்தப் பள்ளியில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கூறுவது வழக்கம். அந்த ஹாலில் ஒரு பெரிய இயேசுவின் பாடுபட்ட சிலுவை இருக்கும். அதில் இயேசு தொங்கிக் கொண்டு இருப்பது போலவும், இரத்தம் சிந்துவது போலவும், காட்சித் தரும். அந்த திருச்சிலுவையை உற்று நோக்கும் போது, அந்த நான்கு வயது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, நமக்குக் கூட கண்ணீர் வரும். இதைப் பயன்படுத்தி அந்தத் தலைமையாசிரியர், புதிதாக சேர்க்கப்பட்டிருக்கும் அந்தப் பிள்ளைகளை பார்த்து கூறுவார் "சிலுவையை உற்றுப் பார், இந்தக் கதி உனக்கு வரக் கூடாது. நீ பள்ளியில் பாடங்களை சரியாக படிக்காத போதும், தவறு செய்யும் போதும் பலவித சேட்டைகளை செய்யும் போதும், இந்த மாதிரி நிலை உனக்கு ஏற்படும். அதனால் ஜாக்கிரதையாய் இரு. நீங்கள் தவறு செய்தால், உங்கள் ஒவ்வொருவரையும், இவ்விதமாக சிலுவையில் ஏற்றி விடுவேன் என்றார். இந்த ஒரு அச்சம், அந்த சிறுவர்களுடைய ஆழ்மனதில் பதிந்து பள்ளியில் அடிமைகள் போலவும், வீட்டில் பிள்ளைகள் சுதந்திரமாக இருக்கும் நிலையும் ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நாம் கற்பிக்கும் பாடம் என்ன! **திருச் சிலுவை, ஒரு புனிதமான பொருள். அது மற்றவரை பயமுறுத்தும் பொருள் அல்ல. திருச் சிலுவையை மற்றவர்களுக்குக் காட்டி பயமுறுத்தக் கூடாது** என்பதை தெரிந்து கொள்வோம். திருச்சிலுவை, உலகத்தின் இரட்சணியம், மீட்பு, திருச்சிலுவையை பார்க்கும்போது நாம் மனம் மாறி புனிதமடைய வேண்டும். திருச்சிலுவை இல்லையென்றால் கிறிஸ்துவம் இல்லை. இதை எப்போதும் நம் மனதில் நிறுத்தி வழிபடுவோம். ●



**இறந்த நம் ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்தவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் நாமும் அவ்வாறே கடவுளுக்கு ஏற்புடையவர்கள் எனக் கருதப்படுவோம் (உரோ.4:24)**



Irene Savary

# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**"நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர் அவரது அன்பிற்குரியவர்"**

அன்பின் நல் உருவமாய், அரவணைப்பில் நல் அன்னையாய், அமைதியின் உயர் சிகரமாய், எம்மை வளர்த்திட்ட அன்பு தாயே! இறைவன் உம்மை எடுத்துக் கொண்டாலும் நீர் நம்பி வாழ்ந்த கடவுள் உம்மை அவரது இல்லத்தில் மகிமையில் அமைதியில் ஏற்றுக்கொள்வாராக!

## ஜெபம்

ஓ! இனிய இயேசுவே! நிலையான பேரின்பத்தின் தூய ஒளியே, கருணையின் உருவே, உம்மால் அழைக்கப்பட்டவரும் என்றும் மறக்க முடியாதபடி எங்கள் மனதில் நிலைத்துவிட்டவருமான எங்கள் அன்பு அன்னையின் ஆன்மாவை, இரக்கமுடன் உமது இறையாட்சியில் இணைத்திட வேண்டுமென்று இறைஞ்சுகிறோம். - ஆமென்.

**பிரிவால் துயருறும்**

மகன்: Gilles Savary - மருமகள்: Stephanie
பேரப்பிள்ளைகள்: Charles Celeste Soline
சகோதரி: Francoise Marianadin குடும்பத்தினர்.
சகோதரன்: Raymond Mouttapa
மற்றும் குடும்பத்தினர்.

**பிறப்பு:27-11-1954** **இறப்பு:13-03-2016**

***திருப்பலி: 13-03-2018 மாலை 5.30 மணிக்கு ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.***

---



**அருட்சகோதரி ஏஞ்சல்மேரி**

| | | |
|---|---|---|
| **தோற்றம்** | : | **01-10-1922** |
| **துறவு வாழ்வு** | : | **06-09-1941** |
| **நித்திய துறவற வாழ்வு** | : | **20-05-1945** |
| **மறைவு** | : | **16-03-2003** |

# 15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்"-யோவான்.11:25***

## ஜெபம்

இரக்கம் நிறைந்த இறைவா!
எங்களை அன்புடன் நேசித்து எங்கள் நல்வாழ்வுக்காக
அனைத்து தியாகங்களையும்
இன்முகத்தோடு ஏற்று வாழ்ந்த உமது அடியார்
அருட்சகோதரி **ஏஞ்சல்மேரி**
அவர்களின் ஆன்மா என்றென்றும்
மோட்ச பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில்
சேர்ந்து மகிழ உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

**பிரிவால் துயருறும்**

**சகோ. சந்தனசாமி**
**மற்றும் குடும்பத்தினர்.**
அரியாங்குப்பம், புதுவை.

**திருப்பலி:**16-03-2018 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும், காலை 6.00 அரியாங்குப்பம், ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும், காலை 6.00 ரெட்டியார்பாளையம் புனித ஆந்திரேயா ஆலயத்தில் ஆத்தும இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

## நினைவு அஞ்சலி

## விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







**திரு. ரோக் செல்வநாதன்**

**மலர்ந்தது:29-10-1923**

**உதிர்ந்தது:03-12-2013**

**திருமதி.மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

**மலர்ந்தது:01-10-1931**

**உதிர்ந்தது:15-03-2009**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" - யோவான்.11:25**

**செபம்**

இறைவா! அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமான ஆண்டவரே, ஆத்துமங்களை இரட்சிப்பவரே, உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்

**திரு. ரோக் செல்வநாதன் - திருமதி. மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

அவர்களின் ஆத்துமத்திற்கு இரக்கம் புரிந்து முடிவில்லா பிரகாசத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்**

**மற்றும் குடும்பத்தினர்.**

***15-03-2018 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு கோட்டுச்சேரி சகாய அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.***

***15-03-2018 காலை 9.00 மணிக்கு பிரான்ஸ் நாட்டில் Ermont யில் உள்ள புனித Flaive தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.***

## In Loving Memory of



MR. M. JOSEPH ANTOINE

**BORN:** 31-10-1956

**DIED:** 14-03-2017

## ON THE ANNIVERSARY OF THE DAY YOU WENT AWAY

Today's the anniversary
Of the day that we lost you,
And for a time it felt as though
Our life had ended too.

But loss has taught us many things
And now we face each day,
With hope and happy memories
To help us on our way.

And though we are full of sadness
That you're no longer here,
Your influence still guides us
And we still feel you near.

What we shared will never die
It lives within our hearts,
Bringing strength and comfort
While we are apart.

**Wife, Daughters, Son-in-Law and Grand-son.**

Mass on **14-03-2018** Wednesday at 6.00 a.m. in Rosary Church Muthialpet, Puducherry.

---

# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல்



திருமதி. **ஜோஸ்பின் பிலோமேன்ராஜ்**

**தோற்றம் : 4-4-1948**

**மறைவு : 15-3-2016**

**ஜெபம்**

அன்பின் இறைவா! இவ்வுலகில், அன்பின் உருவாய், பொறுமையின் சிகரமாய் நட்பின் இலக்கணமாய்த் திகழ்ந்து விண்ணுலகிற்கு உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட உமது விசுவாசியாகிய,

## திருமதி. ஜோஸ்பின் பிலோமேன்ராஜ்

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்தருளும்படி இறைஞ்சி மன்றாடுகிறோம். ஆமென். - கர்.மங்.திரி.

15-3-2018 காலை 6.00 மணிக்கு புதுவை முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு புதுவை, தூய இதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்
கணவர்: சிந்தனை செல்வர் **இர. பிலோமேன்ராஜ்**
பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி (முன்னாள் ஆசிரியர்)
அரசுவேலைவாய்ப்புத்துறைஉதவியாளர் (ஓய்வு);எழுத்தாளர் சர்வவியாபி இதழ்
கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பாளர்.
மகள்கள்: கிறிஸ்டா பெல்லா இருதயமரி - ஸ்டீபன்ராஜ்
அனிதா எழிலரசி - பூபாலன்; மகன்: ஜோசப் - லில்லி ப்ளோரா
பேரப்பிள்ளைகள்:
ஆண்டனி டிரிஸ்டன், மோனிகா மார்சீனா, அருள்பிரகாசம், சாரா
முத்தியால்பேட்டை, புதுவை-3.

**நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.**

2-ம் பக்கத் தொடர்ச்சி....

**திருஅவையின் இரக்கப்பணி:** கடவுளின் இதயத்தி லிருந்து மட்டுமே புறப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் சிலுவை யின் வழியே அருளப்படும் இரக்கம், காயப்பட்ட இதயங்களை நலமாக்கும், குழுமங்களுக்கும் தனி மனிதர்களுக்கும் இடையே இருக்கும் உறவு விரிசல்களைச் சரிப்படுத்தும், நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டு துயர்களினின்று அவர்களை தூக்கி நிறுத்தும். இத்தகைய இடர்மிகு சூழலில் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் இரக்கத்தின் உண்மையான சாட்சிகளாய் இருக்க உறுதிபூணுகிறோம், இதுவே நற்செய்தியின் சாரம்சமும் கிறிஸ்தவ சீடத்துவத்தின் வெளிப்பாடும் ஆகும். அதனை புனித அன்னை தெரெசாவின் மென்கரங்களிலும் “முகவரி”களிலும் (Wrinkles), அருளாளர் இந்தூர் இராணி மரியாவின் மறைச்சாட்சியத்திலும் காண்கிறோம்.

தேசத்திற்கான நமது பணியில், குறிப்பாக தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்டோருக்காக, அவர்களின் பொருளாதார அளவுகோலினால் அன்றி, மனித வழிகாட்டுக் கொள்கையினால் ஆன முழு மனித முன்னேற் றத்திற்காக, கிறிஸ்தவர்களாகிய நாம் அனைத்து குடிமக்க ளுடனும் கரம் கோர்த்துச் செல்கின்றோம்.

நமது, நாட்டின் அடிப்படை சட்டத்தில் உள்ளபடி உண்மையாகவே மதச்சார்பற்ற (truly secular), பொதுமைத் தன்மைமிக்க (Socialist), ஜனநாயக நாட்டினை நிலைநிறுத்த அனைத்து வித குறுகிய தடைச்சுவர்களையெல்லாம் கடந்து செல்ல நாம் உறுதிகொள்கிறோம். - (அறிக்கை தொடரும்...)

**உலகிலுள்ள சிறாரில், நான்கில் ஒரு பகுதியினர் நெருக்கடியில்:** 2017ம் ஆண்டில், உலகில் நான்கு சிறாருக்கு ஒருவர் வீதம், மனிதாபிமானப் பேரிடர்களை எதிர்கொண்டனர் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர், ஐ.நா. மனித உரிமைகள் அவையில், இத்திங்களன்று கூறினார். ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் அவையின் 37வது அமர்வில், சிறாரின் உரிமைகள் பற்றிய கலந்துரையாடலில், திருப்பீடத்தின் நிலைப்பாட்டை எடுத்துரைத்த பேராயர் இவான் யுர்க்கோவிச் அவர்கள், இன்றைய உலகின் அனைத்துப் பகுதிகளிலும், நெருக்கடி நிலைகள் அதிகரித்து வருவதை நாம் அனுபவித்து வருகின்றோம் என்று கவலை தெரிவித்தார். உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டாலும், 2017ம் ஆண்டில், 53 கோடியே 50 இலட்சம் சிறார், மனிதாபிமானப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும், கூறினார் பேராயர் யுர்க்கோவிச். - வத். வானொலி.

**மறையுரையாளர் பில்லி கிரகாம் – இறுதி மரியாதை :** பிப்ரவரி 21, தன் 99 வது வயதில் இறையடி சேர்ந்த கிறிஸ்தவ மறையுரையாளர் பில்லி கிரகாம் அவர்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத் தலைவர் உட்பட, பல அரசு அதிகாரிகளும், மக்களும் பிப்ரவரி 28 இப்புதனன்று தங்கள் இறுதி மரியாதையை செலுத்தினர். பில்லி கிரகாம் அவர்களின் உடல், வாஷிங்டன் நகரில் Capitol Rotunda எனுமிடத்தில் மக்களின் வணக்கத்திற்காக, பிப்ரவரி 28 மற்றும் மார்ச் 1 ஆகிய இரு நாட்கள் வைக்கப்பட்டிருந்தது. ‘அமெரிக்காவின் மேய்ப்புப் பணியாளர்’ என்று அறியப்படும் பில்லி கிரகாம் அவர்கள் Harry Truman முதல் Donald Trump முடிய 13 அரசுத் தலைவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக இருந்துள்ளார். 21 கோடிக்கும் அதிகமானோரை, தன் மறையுரைகளால் கவர்ந்துள்ள பில்லி கிரகாம் அவர்களின் உடல், அவர் பிறந்த இடமான Charlotte ல் மார்ச் 2ம் தேதி நல்லடக்கம் செய்யப்பட்டது. - CNS/ வத்.வானொலி.



**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 49 கர்தினால்கள் – புதிய நூல்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கியுள்ள 49 கர்தினால்கள், தங்களை திருத்தந்தை தெரிவு செய்தது குறித்தும், திருஅவையின் மாற்றங்கள் குறித்தும் பகிர்ந்துள்ள கருத்துக்களைத் தொகுத்து, புதிய நூல் ஒன்று, பிப்ரவரி 28, இப்புதனன்று வெளியிடப்பட்டுள்ளது. “Tutti gli uomini di Francesco” அதாவது, “பிரான்சிஸ் அவர்களின் அனைத்து மனிதர்கள்” என்ற தலைப்பில் புனித பவுல் வெளியீட்டகம் உருவாக்கியுள்ள இந்நூலுக்கு, ஹொண்டுராஸ் நாட்டின் முதல் கர்தினாலாக உயர்த்தப்பட்ட கர்தினால் ஆஸ்கர் ரோத்ரிகஸ் மரதியாகா (Oscar Rodriguez Maradiaga) அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். புவனஸ் அயிரஸ் பேராயராகப் பணியாற்றி வந்த ஹோர்கே மாரியோ பெர்கோலியோ அவர்கள், 2001ம் ஆண்டு, புனிதத் திருத்தந்தை 2ம் ஜான்பால் அவர்களால், கர்தினாலாக உயர்த்தப்பட்ட அதே நாளன்று கர்தினால்களாக உருவாக்கப்பட்ட 44 பேரில் தானும் ஒருவராக இருந்ததை, கரதினால் மரதியாகா அவர்கள் தன் அணிந்துரையில் குறிப்பிட் டுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ள 49 கர்தினால்களில், மூன்றில் இருவர், ஐரோப்பியர் அல்லாதோர் என்றும், தற்போது, திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொண்ட 118 கர்தினால்களில் 68 பேர், ஐரோப்பிய கண்டத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்றும் வத்திக்கான் நாளிதழ் L'Osservatore Romano கூறியுள்ளது. - வத்.வானொலி.


## செங்கல்பட்டு, பாலேஸ்வரம்

இறக்கும் தருவாயிலிருக்கும் ஆதரவற்றவர்களைப் பராமரிக்கும் **கருணை இல்லத்திற்கெதிராக** பாசிச, பிற்போக்கு, மதவாத அமைப்புகளால் தொடுக்கப்படும் அவதூறு மற்றும் வன்முறைகளைக் கண்டித்தும்,

அருட்பணி **R.V. தாமஸ்** அவர்களின் மனித நேயப் பணிகளை அவமரியாதை செய்வதைக் கண்டித்தும், கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மையினருக்கும் அவர்களுடைய மனித நேய நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வேண்டியும், நடைபெறும்

**கண்டன, கவன ஈர்ப்புப் போராட்டம்**

நாள் : **10-03-2018 - சனிக்கிழமை**

நேரம்: **காலை 10.00 முதல் 1.00 வரை**

இடம்: **வ.உ.சி. திடல்** செஞ்சி சாலை திண்டிவனம்.

**ஏற்பாடு :** கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கம் பாண்டி - கடலூர் உயர் மறைமாவட்டம் திண்டிவனம் மறைவட்டம் அனைத்து கிறிஸ்துவ சபைகளின் கூட்டமைப்பு அனைத்து சிறுபான்மையினர் கூட்டமைப்பு மற்றும் அனைத்து முற்போக்கு இயக்கங்கள்.

**மனிதம் காக்க அனைவரும் திரண்டு வாரீர்!**


**விசுவாசக் கோட்பாட்டு பேராயம் வெளியிட்டுள்ள Placuit Deo:** கிறிஸ்தவ மீட்பைக் குறித்து அவ்வப்போது எழும் பல கேள்விகளுக்கு பதில் தரும் வகையில், திருப்பீடத்தின் விசுவாசக் கோட்பாட்டு பேராயம், மடல் ஒன்றை உருவாக்கி, உலகெங்கும் உள்ள ஆயர்களுக்கும், விசுவாசிகளுக்கும், இவ்வியாழனன்று அனுப்பியுள்ளது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார். கிறிஸ்தவ மீட்பின் குறிப்பிட்ட சில அம்சங்களை விளக்கும் வகையில், திருப்பீடத்தின் விசுவாசக் கோட்பாட்டு பேராயர் Placuit Deo என்ற பெயரில் உருவாக்கியுள்ள ஒரு மடலை, இப்பேராயத்தின் தலைவர் பேராயர் Luis Francisco Ladaria அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்ட வேளையில் இவ்வாறு கூறினார். திருப்பீடத்தின் விசுவாசக் கோட்பாட்டு பேராயம், இவ்வாண்டு சனவரி 23ம் தேதி முதல் 26ம் தேதி முடிய மேற்கொண்ட ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தில் நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றங்களின் இறுதியில் உருவாக்கப்பட்ட இம்மடலை வெளியிடுவதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். - வத்.வானொலி.

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.